**சார்பு நீதிமன்றம், கோவில்பட்டி**

முன்னிலை: திருமதி. **M. அகிலா தேவி,** M.L,
சார்பு நீதிபதி,

2019ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 25ம் நாள் புதன்கிழமை

**அ.வ.எண்.106/2019**

T. அமிர்தசெல்வம் ... வாதி ...

/எதிர் /

D. செல்வக்குமார் ... பிரதிவாதி ...

இவ்வழக்கு இந்நீதிமன்றம் முன்பாக இறுதி விசாரணைக்காக வந்தபோது, வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. S. சத்தியநாராயணன், அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் யாரும் ஆஜரின்றியும், பிரதிவாதியை அழைத்தும் ஆஜரில்லை என்பதால் ஒருதரப்பாக்கப்பட்டும், வாதி தரப்பு வாதங்களைக் கேட்டும், சான்றாவணங்களைப் பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

**தீர்ப்புரை**

வாதி தரப்பில் உரிமையியல் நடைமுறைச் சட்டம் வகுமுறை 7 விதி 1ன் கீழ், வாதிக்கு, பிரதிவாதி ரூ.4,49,733/-ம் அதில் அசல் தொகை ரூ.4,00,000/-க்கு பிராது தாக்கல் தேதி முதல் தொகை வசூலாகும் தேதி வரை 12% வட்டியும் சேர்த்து செலுத்தும்படிக்கும், வழக்கின் செலவுத் தொகை கேட்டும் வாதியால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) வாதி பிரதிவாதியிடம் கடந்த 11.06.2018 அன்று வாதி வீட்டில் வைத்து ரூ.4,00,000/- கடனாக பெற்றுக்கொண்டு மேற்படி தேதியில், மேற்படி தொகைக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.100/-க்கு ரூ.1.50/- வீதம் வட்டி சேர்த்துக்கூடிய வட்டியும் முதலும் வேண்டும்போது வாதிக்கு செலுத்துவதாய் சரத்துக்கண்டு வாதி பெயருக்கு ஒரு பிராமிசரி நோட்டு எழுதிக்கொடுத்தார் என்றும், மேற்படி தொகையை வட்டியுடன் செலுத்துவமாறு வாதி பிரதிவாதியிடம் கேட்ட போது வீண் காலம் கடத்தி வந்ததால், மேற்படி தொகையை வசூலிக்க வாதியால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) வாதி தரப்பு வழக்கை நிரூபிப்பதற்கு வாதி வா.சா.1ஆக விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.1 ஆவணத்தை தாக்கல் செய்துள்ளார். மேலும் வாதி

தரப்பில் ம.வாலன் என்பவர் வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். தாவா கடன்தொகை குறித்து பிரதிவாதி பதில் சொல்ல கடமைப்பட்டவர். ஆனால் பிரதிவாதி நீதிமன்றத்தில் ஆஜராகாமல் தோன்றா தரப்பினர் ஆகிவிட்டார்.

4) வா.சா.1 ஆனவர் தனது பிரமாண வாக்குமூலத்தில், வழக்குரையில் கூறப்பட்டுள்ள சங்கதிகளை ஒத்து சாட்சியம் அளித்துள்ளார். தாவா பிராமசரி நோட்டில் 2வது சாட்சியாக கையொப்பம் செய்துள்ள ச.மொகம்மது அல்ஜாமீல் என்பவர் வாதி சாட்சி 2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். வா.சா.2 அவருடைய சாட்சியத்தில், "பிரதிவாதி, வாதியிடம் ரூ.4,00,000/- கடனாகப் பெற்றுக்கொண்டு ஒரு பிராமிசரி நோட்டு எழுதிக்கொடுத்தார் என்றும், மேற்படி பிராமிசரி நோட்டில் நானும், சங்கர் என்பவரும் சாட்சிகளாக கையெழுத்து செய்தோம்" என்றும் சாட்சியத்தில் ஒப்புக்கொணடுள்ளார். ஆக தாவா பிராமிசரி நோட்டின் பேரில் ஏற்பட்டுள்ள இந்த வழக்கை பொறுத்து வாதி தன்னையும், சாட்சிகளையும் விசாரித்துக்கொண்டு தனது மெய்பிக்கும் கடமையை நிறைவேற்றியுள்ளார். மேற்படி வாதியையோ மற்றும் வாதி சாட்சி2-யோ பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை செய்ய முன்வரவில்லை. பிரதிவாதி அவருடைய மெய்ப்பிக்கும் சுமையை நிறைவேற்றவில்லை. பிரதிவாதி நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியம் கூறவோ, தன்னை குறுக்கு விசாரணைக்கு உட்படுத்திக் கொள்ளவோ முன்வராமல் தோன்றா தரப்பினராகிவிட்டார்.

6) மேலும் தாவா புரோநோட்டின் தேதி 11.06.18 ஆகும். இந்த வழக்கானது கடந்த 27.06.2019 அன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே வழக்கானது தகுந்த காலக்கெடுவுக்குள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆக வா.சா.1, வா.சா.2 சாட்சியங்களையும், வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணத்தையும் பரிசீலிக்கும்போது, வாதியின் வழக்கை புறக்க ணிப்பதற்கு முகாந்திரம் இல்லை. வாதியின் வழக்கு அப்படியே ஏற்றுக்கொள்ளப்பட்டு வழக்கின் சங்கதிகள் நிரூபிக்கப்பட்டதாக முடிவு செய்யப்படுகிறது.

முடிவில், வாதியின் வழக்கு செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்பட்டு, வாதிக்கு, பிரதிவாதி ரூ.4,49,733/-ம் அதில் அசல் தொகை ரூ.4,00,000/-க்கு பிராது தாக்கல் செய்த தேதியான 27.06.2019ல் இருந்து தொகை செலுத்தும் நாள் வரை 6% பின்வட்டியும் சேர்த்து தீர்ப்பு தேதியில் இருந்து 2 மாத கால அவகாசத்திற்குள் செலுத்த வேண்டும் என்று தீர்ப்பளிக்கப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2019ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 25ம் நாள் (25.09.2019) திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ஒம்/-திருமதி.எம்.அகிலா தேவி,
**சார்பு நீதிபதி,**
**கோவில்பட்டி.**

**வாதி தரப்பு சாட்சிகள் :-**

வா.சா.1 : ச. அமிர்தசெல்வம் (வாதி)

வா.சா.2 : ம. வாலன்

**வாதி தரப்பு சான்றாவணங்கள் :-**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 11.06.2018 | வாதிக்கு பிரதிவாதி ரூ.4,00,000/-க்கு எழுதிக்கொடுத்த பிராமிசரி நோட்டு அசல் |

**பிரதிவாதி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :-** இல்லை.

ஒம்/-திருமதி.எம்.அகிலா தேவி,
சார்பு நீதிபதி,
கோவில்பட்டி.

சார்பு நீதிமன்றம், கோவில்பட்டி.

*அசல் வழக்கு எண்.106/2019*

வரைவு/நேரிய தீர்ப்புரை

*நாள் : 25.09.2019.*